18.06.2024

அ.வ.எண். 1071-2017 மற்றும் 160-2021 மற்றும் 8-2021

வாசா.2 - மணிகண்டன்

முதல் விசாரணை தொடர்ச்சி

23.11.1986 தேதிய கருமத்தம்பட்டி கிராமம் புல எண்.614/1E க்கான 959 நம்பர் க்கான பட்டா மற்றும் அதன் புல வரைபடம் இந்த அலுவலகத்தில் இல்லை.

இந்த சூலூர், இதற்கு முன்பாக பல்லடம் வட்டத்துடன் இணைந்திருந்ததால் பல்லடம் வட்டத்தில் வட்டாட்சியர் அலுவலகத்தில் இந்த ஆவணங்கள் இருக்கலாம் அதை கேட்டு நாங்கள் கடிதம் அனுப்பி உள்ளோம். BOARD STANDING ORDER படி தான் நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு அதன் அடிப்படையில் டாம்டாம் அடிக்கப்பட்டு விசாரணைக்கு பின்னிட்டு தான் பட்டா வழங்கப்படும் என்றால் சரிதான். அதன்படி நில உரிமைதாரர்களும் விசாரணையில் ஆஜராகி பட்டா பெற்றுக்கொள்ளலாம் என்றால் ஆமாம். அதில் அறிவிப்பானது ஆட்சேபணை தெரிவிக்க வேண்டும் என்றும் ஆட்சேபணை இல்லை என்றால் பட்டா வழங்கப்பட்ட நபரை உரிமையளாராக கருதப்படும் என்றால் ஆமாம். புல எண்.614/1E க்கான நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பட்டா எண்.959 தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் 1986 சமயத்தில் தனி வட்டாட்சியர் நியமனம் செய்யப்பட்டு கொடுக்கப்பட்ட பட்டா தான் இந்த ஆவணம் வா.சா.ஆ.31 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சா.சா.ஆ.1 மற்றும் 2 ல் எந்த இடத்திலும் புல எண்.614/1E க்கு ரங்கசாமி மற்றும் கந்தசாமி பெயர்கள் இடம் பெறவில்லை என்றால் சரிதான். அதேபோல் சக்திகுமார் என்கிற விஜயராகவன் மற்றும் தனபால் ஆகியோர்கள் பெயரும் இடம் பெறவில்லை என்றால் சரிதான். ஒரு நிலத்தை விற்பனை செய்யும்போது TAMILNADU SURVEY AND BOUNDARY Act ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு ஆட்சேபணை பரிசீலனை செய்யப்பட்டு தான் உட்பிரிவு கொடுக்கப்படும் என்றால் ஆமாம். தற்போது சக்திகுமார்

என்கிற விஜயராகவன் மற்றும் தனபால் பெயர் 2023 தேதியிட்ட RDO உத்தரவின் கீழ் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. பசலி 1395 ல் ஆண்டில் தான் 614/1 என்ற காலை 614/1A முதல் 614/1E உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 614/1 என்பது மொத்த விஸ்தீரணம் 15.99 ஏக்கர் என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் சொல்ல முடியும். 614/1E ராமசாமி பெயரில் உட்பிரிவு செய்யப்பட்டது 3.33.5 ஹெக்டேர் என்றால் ஆமாம்.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>

நீதிமன்றத்தில் இருந்து அசல் அடங்கல், RSR 1912ம் ஆண்டிற்குரியது தாக்கல் செய்ய பணிக்கப்பட்டிருந்தது. நான் 1912ம் ஆண்டிற்குரிய RSR ஆவணத்தை நீதிமன்றதில் தாக்கல் செய்யவில்லை. புல எண்.614 ஐ பொறுத்து தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் 1912ம் ஆண்டிற்கான புல எண்.614ற்கு உரிய RSR என்றால் ஆமாம் அது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 614 நம்பர் காலையில் மொத்த விஸ்தீரணம் 17.54 ஏக்கர் காட்டப்பட்டுள்ளது. 614 நம்பர் காலை யாருக்கு பாத்தியப்பட்டதாக பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சக்கரைத்தேவன் மற்றும் இன்னும் 3 நபர்களுக்கு புல எண்.614/1 நம்பர் காலையில் 15.99 ஏக்கர் பாத்தியப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சூலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணியில் சேர்ந்து 1 ½ ஆண்டுகள் ஆகிறது. நீதிமன்ற அழைப்பாணை வந்து சுமார் 2 மாதங்கள் ஆகிறது.

நான் இந்த 2 மாதங்களில் 1912ம் ஆண்டு முதல் இன்றைய தேதி வரை உள்ள இந்த வழக்கு சம்மந்தப்பட்ட புல எண்களுக்குரிய ஆவணங்களை புல தணிக்கை செய்து வந்தேனா என்றால் இல்லை. 614/1 ற்கு கட்டுப்பட்ட சொத்துக்களை நான் புல தணிக்கை செய்தேனா என்றால் இல்லை. சா.சா.ஆ.1 ல் பசலி ஆண்டு 1380 முதல் 1394 வரை சென்னிமலை கவுண்டர் வகையறா பெயரில் தான் அடங்கல் தாக்கல் ஆகி உள்ளது என்றால் ஆமாம். சென்னிமலை கவுண்டர் வகையறா என்பது யார் பெயரை எல்லாம் உட்படுத்தியது என்று ஆவணங்களை

பார்க்காமல் சொல்ல முடியாது. ஒவ்வொரு கிராம பட்டா வழங்கல் பதிவேட்டிலும் பட்டா பெயர் மாற்றம் செய்யும் போது எதன் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யப்படுகிறது என்ற குறிப்பு எழுதப்படும் அதன் படி இந்த வழக்கிற்குரிய 614/1E காலையில் 1986 எதன் அடிப்படையில் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்ற குறிப்பு இருக்கும், அது ஆவணத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும். எங்கள் அலுவலகத்தில் இந்த ஆவணம் இல்லாததால் நான் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு நான் பார்க்கவில்லை.

வா.சா.ஆ.11 புல எண்.614 ற்கான அ-பதிவேடு அதில் ராமசாமி மற்றும் 5 நபர்கள் என்று பட்டா கொடுக்கப்பட்டுள்ளது மற்ற 5 நபர்கள் பெயர் ஆவணத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும். என்னிடம் காட்டப்படும் பட்டா எங்களது அலுவலகத்தில் இருந்து எடுக்கப்பட்ட பட்டா என்றால் ஆமாம் அது பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த ஆவணம் பட்டா கோயம்புத்தூர் தெற்கு கோட்டாட்சியர் அவர்களால் ரத்து செய்யப்பட்டுள்ளது என்று வாதி தரப்பில் ஆட்சேபணையுடன் செய்யப்பட்டது. பி.வா.சா.ஆ.2 ஆவணததில் உள்ள உட்பிரிவும் வருவாய் துறையால் முறையாக விசாரணை செய்யப்பட்டு வழங்கப்பட்ட உட்பிரிவு என்றால் ஆமாம். வருவாய் துறையில் ஒரு வழக்கு நிலுவையில் உள்ளபோது அந்த புல எண். சம்மந்தமாக பட்டா மாற்றம் செய்யக்கூடாது என்று நிலையாணை உள்ளது என்றால் சரிதான். நான் சாட்சியம் அளிக்க வருவதற்கு முன்பு வழக்கு சொத்தில் தற்போது யார் அனுபவத்தில் உள்ளார், தற்பொழுது யார் பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் உள்ளது என்றெல்லாம் புல தணிக்கை செய்யவில்லை. என் கையில் நான் எடுத்து வந்துள்ள ஆவணங்களை வைத்து தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

Sd/மணிகண்டன்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga

District Munsif
Sulur